செ.வெ.எண: 728 / 2019 நாள் 01.09.2019

# தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி -4 (Group - 4)க்கான தேர்வு மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு வடநேரே இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள்

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே இ.ஆ.ப., அவர்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி -4 (Group - 4)க்கான தேர்வு நடைபெற்ற நாகர்கோவில், எஸ..எல்.பி. அரசு மேல்நிலைப்பள்ளி மையத்தினை இன்று (01.09.2019) ஆய்வு மேற்கொண்டார்கள்.

நடைபெற்ற ஆய்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

இன்று நடைபெறும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி -4 (Group - 4)க்கான தேர்வு, கன்னியாகுமரி மாவட்டத்தில் 149 தேர்வு மையத்தில் மொத்தம் 45,000 பேர் தேர்வு எழுதுகிறார்கள். இதில் 6 மையங்களில் 1000-ம் மேற்பட்ட நபர்கள் தேர்வு எழுதுகிறார்கள். ஒவ்வொரு தேர்வு மையத்திற்கும் ஒரு ஒளிப்பதிவாளரும், 1,000-க்கு மேற்பட்ட நபர்கள் உள்ள தேர்வு மையத்திற்கு 2 ஒளிப்பதிவாளரும் நியமிக்கப்பட்டுள்ளாகள். தேர்வு நடைபெறும் அனைத்து மையத்திற்கும் மாவட்ட ஆட்சித்தலைவர், உயர் அலுவலர்கள் மற்றும் 19 பறக்கும் படை குழுவினரும் ஆய்வு மேற்கொள்வார்கள். நமது மாவட்டத்தில் அதிகமான நபர்கள் இந்த தேர்வில் பங்கேற்றுள்ளார்கள். மேலும், அதிக நபர்கள் தேர்வில் தேச்சிபெற்று வரவுள்ளர்கள். அவர்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.